வணிகக்கல்வி

இலங்கை மத்திய வங்கி



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி :- 7.0

தேர்ச்சி மட்டம் 7.3 :- இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளைத் தேடியறிவர்.



இலங்கை மத்திய வங்கி

இலங்கையின் நிதிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக அரசின் பிரதிநிதியொருவராகச் செயற்படும் மத்திய நிலையமே இலங்கை மத்திய வங்கியாகும்.

- 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க நிதிப்பிரமாணச் சட்டத்தின் கீழ் 1950 ஆகஸ்ட் 28ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
- இதன் ஆரம்ப ஆளுனர் ஜோன் எக்ஸ்டர் ஆவார்.
- இலங்கை மத்திய வங்கி ஆளுநர், நிதி அமைச்சரின் செயலாளர் மற்றும் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய 5 பேர்களைக் கொண்ட நிதிச் சபையினால் மத்திய வங்கியின் ஒழுங்கமைப்புக் கருமங்கள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்கள்

இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களை 2 பிரதான வகைகளுக்குள் உட்படுத்தலாம்.

1) பொருளாதார மற்றும் விலை மட்டங்களின் உறுதியினைப் பேணுதல்

நாட்டின் நாணயத்தின் உள்நாட்டுப் பெறுமதியை நிலையாகப் பேணுதலை இது குறிக்கும். அதாவது பணவீக்கம் மற்றும் பணச்சுருக்க நிலைமைகளற்ற பொருளாதாரத்தைப் பேணுதல் இதன் மூலம் எட்டப்படுகின்றது.

பணவீக்கம் குறைந்த மட்டத்தில் காணப்படும் போது, அது நிலையான பொருளாதார அபிவிருத்திக்கும், கூடிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் காரணமாக அமையும்.

www.e-thaksalawa.moe.gov.lk
Copy

தொகுப்பு: திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2) நிதித்துறையின் உறுதியினைப் பேணல்

⇒ பொருளாதாரத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய ஆற்றல் நிதித்துறையின் நிலையான தன்மை எனப்படும்.

⇒ நிதி முறைமையில் பாதுகாப்பினை ஏற்படுத்துதல், உறுதித்தன்மைக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை இனங்காணல் மற்றும் இழிவுபடுத்துதல் மூலம் நிதிமுறையினை வலுவூட்டலாம்.

⇒ இதன் மூலம் வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் எனும் இரு பிரிவினர்களுக்கும் அனுகூலமான நிலைமை உருவாகலாம்.

இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள்

இலங்கை மத்திய வங்கி தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பின்வரும் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு: திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதித்துவத் தொழிற்பாடுகள்

1) அரசின் கடன் முகாமைத்துவம்

2) வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடு

3) சிறியளவிலான நிதியீட்டல் வேலைத்திட்டங்களுக்குக் கிராமியக் கடன் முன்மொழிவு முறைகள் தொடர்பில் தலைமை நிறுவனமொன்றாகத் தொழிற்படல்.

4) ஊழியர் நம்பிக்கை நிதியினை முகாமை செய்தல்.

வணிகங்களின் வெற்றிக்கு மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் உதவுகின்ற முறை

1) இலங்கையிலுள்ள வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு முறைமை (Sri Lanka Inter – Bank Payment System - SLIPS)

⇒ வணிக வங்கிகளுக்கு இடையில் இடம்பெறும் நடைமுறைக் கணக்குகளிலான காசோலை மூலமான கொடுக்கல் வாங்கல்கள் மத்திய வங்கியால் தீர்த்து வைக்கும் தொழிற்பாடு இதுவாகும்.

⇒ இத்தீர்ப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய வங்கியும், வணிக வங்கிகளும் சேர்ந்து மூலதனமிடப்பட்டுள்ள "வரையறுக்கப்பட்ட லங்கா கிளியரிங் (தனி)" கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

⇒ வரையறுக்கப்பட்ட லங்கா கிளியரிங் (தனி) கம்பனியானது பின்வரும் தீர்வக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

1. வணிக வங்கிகளுக்கு இடையிலான காசோலைகள் மற்றும் வங்கி ஆணைகள் என்பவற்றின் பரிமாற்றமும், தேறிய மீதியினைக் கணித்தலும்.
2. அத் தேறிய மீதிகளை வணிக வங்கிகளுக்கும் ஏனைய வணிக வங்கிகளுக்கும் அறிவித்தல்

⇒ லங்கா கிளியறிங் தனிக் கம்பனியானது "லங்கா பே" (Lanka Pay) எனும் குறியீட்டுப் பெயரின் கீழ் கொடுக்கல் வாங்கலுக்கான புதிய அட்டையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு: திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2) **சர்வதேச வங்கிகளுக்கு இடையிலான நிதி இலத்திரனியல் வலையமைப்பு - SWIFT தொடர்பாடல் வலையமைப்பு (Sri Lanka World Wide bank Financial Telecommunication - SWIFT)**

⇒ நவீன தொழிநுட்பத்தின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் நிதி நிறுவனங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற நிதிப் பரிமாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தொடர்பாடல் வலையமைப்பு இதுவாகும்.

⇒ இதில் உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகளும், வணிக வங்கிகளும், நிதி நிறுவனங்களும் பங்கேற்கின்றன.

⇒ அனைத்து வங்கிகளிலும் இத்தொடர்பாடல் முறைக்கான ஒரு பிரிவு செயற்படுகின்றது.

3) **அதே நேர தீர்ப்பனவு முறை (RTGS - Real Time Gross Settlement System)**

⇒ இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையில் பெறுமதி கூடிய கொடுப்பனவுகளைக் காலம் தாழ்த்தாது உயர்தொழிநுட்பத்தையும் தர நியமங்களையும் பயன்படுத்தத் தீர்ப்பனவு செய்வதற்கான கணினிக் கொடுப்பனவு முறை இதுவாகும்.

⇒ இது நாட்டில் காணப்படுகின்ற பாரிய பெறுமதியுடன் கூடிய ஒரேயொரு உள்நாட்டுக் கொடுப்பனவு முறையொன்றாகும்.

4) **பத்திரங்களற்ற (ஆவணங்கள்) பிணையத் தீர்ப்பனவு முறை (Scriptless Securities Depository System - SSDS)**

⇒ அச்சிடப்பட்ட பிணைப்பத்திரப் பாவனைக்குப் பதிலாக எதுவித ஆவணங்களும் இன்றி பிணைப்பத்திரங்களை பரிமாற்றுவதற்கு மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் ஆவண பரிமாற்ற முறை இதுவாகும்.

⇒ இது "லங்கா செக்குவர்" (Lanka Secure) என அழைக்கப்படும்.

⇒ அச்சிடப்பட்ட பிணைப்பத்திரங்களைத் தம்வசம் வைத்திருக்கும் போது அல்லது விற்பனை செய்யும் போது ஏற்க வேண்டி ஏற்படுகின்ற இடர்கள் இதன்மூலம் இல்லாமற் போகும்.

RTGS, SSDS ஆகிய இருமுறைகளையும் ஒன்றாக எடுக்கும் போது அது "**லங்கா செட்டில் முறைமை**" எனப்படும்.

RTGS + SSDS = Lanka Settle System

தொகுப்பு: திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)

கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மேற்கூறப்பட்ட நான்கு முறைகளையும் பயன்படுத்தி மத்திய வங்கியின் கொடுப்பனவு தீர்ப்பனவு முறைகள் இடம்பெறுவதால், அவை வணிகக் கருமங்களின் வெற்றிக்கும் நீண்ட காலம் நிலைத்திருப்பதற்கும் பின்வரும் வகையில் உதவிபுரிகின்றன.

01 வணிக வங்கிகளில் முதலீடு செய்தல் தொடர்பில் பாதுகாப்பு உருவாகின்றது.

02 பணக்கொடுக்கல் வாங்கல்கள் இலகுவாகின்றது.

03 பணக்கொடுக்கல் வாங்கல்கள் வினைத்திறனாக இடம்பெற உதவுகின்றது.



01) 2016ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கி அறிக்கையை பயன்படுத்தி மத்தியவங்கியின் தொழிற்பாடுகளை ஆராய்ந்து அறிக்கையொன்றைத் தயார் செய்க.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு: திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk